# குறித்த திகதிக்கு முந்திப் பிறக்கும் உங்கள் குழந்தை வீடு சேர்தல்

**ுந்திப் பிறக்கும் குழந்தை என்றால் என்ன?**
மூன்று கிழமை முந்திப் பிறக்கும் குழந்தையே முந்திப் பிறக்கும் குழந்தை.

பின்வரும் விடயங்களை நினைவில் வைத்திருத்தல் முக்கியம்:

**சரியான வயது:** உங்கள் குழந்தை பிறந்திருக்க வேண்டிய திகதியிலிருந்து அதன் வயதைக் கணிப்பது முக்கியம். அதுவே உங்கள் குழந்தையின் சரியான வயது எனப்படும்.

**தொற்றுநோய் தடுப்பு:** உங்கள் குழந்தையைத் தொடுவதற்கோ பாலூட்டுவதற்கோ முன்னரும், அதன் அரைக் கச்சினை மாற்றிய பின்னரும், நீங்கள் நோய்வாய்ப்படும் பொழுதும் உங்கள் கைகளைக் கழுவவும்.

**வைத்திருத்தல்:** எல்லாக் குழந்தைகளையும் எவ்வளவுக்கு எவ்வளவு அரவணைத்து வைத்திருக்க முடியுமோ அவ்வளவுக்கு அவ்வளவு அரவணைத்து வைத்திருக்க வேண்டும்.

ுந்திப் பிறக்கும் குழந்தைகள் ஏனைய குழந்தைகளிலிருந்து வேறுபட்டவை. ஏனெனில்:
- அவற்றின் தேவைகள் வேறுபட்டவை. அவை எவ்வளவு காலம் முந்திப் பிறந்தவை, அவற்றின் சுகயீனம் எத்தகையது என்பதைப் பொறுத்து அவற்றின் தேவைகள் வேறுபடும்.
- அவற்றின் நரம்பு மண்டலம் (முதிர்ச்சி அடையவில்லை) விருத்தி அடைய அதிக காலம் தேவைப்படும்.
- துரித வளர்ச்சி தேவைப்படும்.

ுந்திப் பிறக்கும் குழந்தைகளுக்கு சத்தமும் கிளர்ச்சியும் தொல்லை கொடுக்கும். முக்கியமாக:
- உங்கள் குழந்தைக்கு என்ன தேவைப்படுகிறது என்பதை அறியவும்.
- உங்கள் குழந்தையுடன் எப்படிக் கதைப்பது என்பதை அறியவும்.
- உங்கள் குழந்தையை எப்படி எடுக்கி வைத்திருந்து கொண்டுதிரிந்து சாந்தப்படுத்துவது (அமைதிப்படுத்துவது) என்பதை அறியவும்.

முதலில் உங்கள் குழந்தைக்கு என்ன தேவைப்படுகிறது என்பதை அறிவது கடினமாய் இருக்கக்கூடும். உங்கள் குழந்தைக்குப் பசிக்கிறதா? உங்கள் குழந்தைக்குக் களைக்கிறதா? உங்கள் குழந்தைக்கு அதிக சத்தம் கேட்கிறதா?

**வீட்டுக்குக் கொண்டுவரப்படும்** குழந்தை **முதல் ஒரு சில கிழமைகளிலும் மாதங்களிலும்** எளிதில் தழப்பத்துக்கும் களைப்புக்கும் உள்ளாகும். முக்கியமாக:
- ஒரே சமயத்தில் ஒருசிலரே குழந்தையைச் சூழவும்.
- குழந்தை அழுதால் அல்லது எரிச்சலடைந்தால் அதனை எடுக்கி, ஆட்டி, போர்த்தவும்.
- குழந்தையை எடுக்கி, அது (சுருண்டு) குறாவிய நிலையில் இருக்கும்படி வைத்திருக்கவும்.
- குழந்தை அதன் கையையோ விரலையோ சூப்பியையோ சூப்ப விடவும்.
- குழந்தையுடன் அமைதியாக, அசையாது இருக்கவும்.
- குழந்தையைச் சூழும் வெளிச்சத்தைத் தணிக்கவும்.
- குழந்தை அழுதால் அதனை எடுக்கவும்.
- குழந்தை மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் இருக்கும் வேளைகளில் அதனுடன் கதைத்து விளையாடவும்.

**பாலூட்டல்**
முந்திப் பிறக்கும் குழந்தைகளை:
- ஓர் அமைதி சூழ்ந்த அறையில், வெளிச்சம் குன்றிய நிலையில் வைத்துப் பாலூட்டவும்.
- குழந்தையை உங்கள் மார்புடன் அரவணைத்து வைத்திருக்கவும், அதன் கைகளை அதன் வாய்க்கருகே வைக்கவும்.
- 2-3 மணித்தியாலங்களுக்கு ஒரு தடவையாவது தாய்ப்பாலூட்டவும் (சில குழந்தைகளுக்குப் பால்மா தேவைப்படலாம்).

(குழந்தை பிறந்திருக்க வேண்டிய திகதியிலிருந்து) குறைந்தது 3-4 மாதங்கள் கழியும் வரை தானிய உணவ

## குறித்த திகதிக்கு முந்திப் பிறக்கும் உங்கள் குழந்தை வீடு சேர்தல்

**முந்திப் பிறந்த உங்கள் குழந்தை:**
- மெதுவாகப் பாலூட்டக்கூடும்.
- பாலூட்டும்பொழுது களைப்படையக்கூடும்.
- பாலூட்டும்பொழுது உறங்கக்கூடும்.

**உறக்கம், விழிப்பு, அழுகை**
**உங்கள் குழந்தை:**
- உறங்கும்பொழுது ஓயாது அரற்றக்கூடும்.
- உறங்கும்பொழுது முறுகி முனகக்கூடும்.
- முதலில் அதிக நேரம் உறங்கக்கூடும்.
- விழிக்கும்பொழுது எரிச்சலடைந்து அழக்கூடும்.
- அழுகையை நிறுத்தச் சிரமப்படக்கூடும்.

**உங்கள் குழந்தை அழும் காரணங்கள் இவை ஆகலாம்:**
- பசி, களைப்பு, தனிமை, மற்றும் அரவணைப்பு அல்லது பெயர்ச்சி இன்மை.
- சத்தம் சந்தடி மிகுதல் (கிளர்ச்சி மிகுதல்)

முந்திப் பிறக்கும் குழந்தைகளைச் சத்தமும் கிளர்ச்சியும் மிகவும் பாதிக்கும்.
உங்கள் குழந்தை களைப்படைந்து, உங்களுடன் விளையாட விரும்பாதபொழுது, அது:
- உங்களை விடுத்து வேறு பக்கம் திரும்பிக் கைகளை நீட்டக்கூடும்.
- அழுது எரிச்சலடையக்கூடும்.
- திடுக்கிடக்கூடும்.
- புருவத்தை நெரிக்கவோ, கொட்டாவி விடவோ, தும்மவோ, நாக்கு நீட்டவோ கூடும்.
- உமிழக்கூடும்.
- வழக்கத்தைவிட வேகமாக மூச்சுவிடக்கூடும்.
- முதுகையும் கழுத்தையும் தலையையும் வளைத்து உங்களை விடுத்து அப்பால் நகரக்கூடும்.

பின்வரும் சூழ்நிலைகளில் உங்கள் குடும்ப மருத்துவரை அழைக்கவும்:
- உங்கள் குழந்தை வெளுறினால் அல்லது நீலம் பாரித்தால்
- மூச்சுவிடச் சிரமப்பட்டால் அல்லது மூச்சுவிடுவதில் மாற்றம் ஏற்பட்டால்
- அழுகை நிறுத்தாவிட்டால்
- உண்ண மறுத்தால்
- உண்பதில் சிரமங்களுக்கு உள்ளானால்
- அன்றாடம் குறைந்தது 6 தடவைகள் மலம் கழிக்கத் தவறினால்
- வாந்தி எடுத்தால், வயிறு கழிந்தால்
- விழிக்கச் சிரமப்பட்டால்
- பலம் குன்றி களைப்பு மிகுந்தால்
- காய்ச்சல் அடித்தால்

**குழந்தை திடீரென இறப்பதைத் தடுக்க வேண்டுமேல்:**
- சிகரற்றுப் புகை குழந்தையை அணுகக்கூடாது.
- குழந்தை எப்பொழுதும் மல்லாந்து படுக்க வேண்டும் (ஆனால் அதனைக் குப்புறக் கிடத்தி விளையாட விடவேண்டும்.

2007...May be photocopied with acknowledgement to the Multicultural Perinatal Network
c/o 416-397-4699 Toronto Public Health
Tamil translation of "Your Preterm Baby Comes Home"


Printed and distributed by Toronto Public Health